ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

पुनरपि जननं पुनरपि मरणं पुनरपि जननीजठरे शयनम् ।
इह संसारे बहुदुस्तारे कृपयाऽपारे पाहि मुरारे ॥

अपारे - கரையில்லாததாயும்
बहूदुस्तारे - விசாலமாயும் தாண்டமுடியாததாயுமிருக்கிற
इह - இந்த
संसारे - ஸம்ஸாரத்தில் இருப்பவனுக்கு
पुनरपि - மறுபடியும்
जननं - உற்பத்தியடைகிறது.
पुनरपि - மறுபடியும்
मरणं - மரிக்கிறது.
पुनरपि - மறுபடியும்
जननीजठरे - மாதாவின் குக்ஷியில்
शयनं - படுக்கையிலிருப்பதாக இருக்கிறது.
हे मुरारे - முரனென்கிற அரக்கனை ஜயித்த ஹே பிரபோ
मां - என்னை
कृपया - கருணையால்
पाहि - பாதுகாரும்.

ஸம்ஸாரமென்பது அடிக்கடி ஜநநமரண ரூபமாயும் அநாதியாயுமிருப்பதால் இந்தக் கஷ்டத்திலிருந்து விலகவேண்டுமானால் ஸ்ரீ பகவானுடைய கிருபையில்லாமல் முடியாதென்று கருதி பகவானிடம் பிரார்த்திக்கின்றார்.

ஸம்ஸாரமென்பது முடிவில்லாததாயும் விஸ்தாரமாயும் இருப்பதால் அதைவிட்டு விலகமுடியாமலிருககின்றது. இந்த ஜன்மா முடிந்தால் இத்தோடு போய்விடுகின்றது இதற்காக ஏன் கவலை கொள்ளவேண்டுமென்று சொல்வதற்கும் இடமில்லை. இது முடிந்தால் மறுபடியும், ஜநநம் ஏற்படுகின்றது. அதிலிருந்து மரணம் மறுபடி ஜநநம் மறுபடி மரணமென்று இடைவிடாமல் மாறிமாறி இவ்விதம் ஜநநமரணப் பிரவாகம் எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்குமேயன்றி ஒருகாலும் ஓயாது ஆகையால் இந்தக்கஷ்டத்திலிருந்தும் விலகவேண்டுமானல ஹே முராரே, மிகவும் பராக்கிரமசாலியான முரன் என்கிற அசுரனை ஸம்காரஞ்செய்த ஹே பிரபோ உம்முடைய கருணையின்றிஸாத்தியப்படாதபடியால்தயவுசெய்து தாங்கள் என்னைக் கடாக்ஷித்து ரக்ஷிக்கவேண்டுமாய் வேண்டுகிறேன் என்று ஒருபக்தர் பிரார்த்திக்கிறார். சுபம்!

உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

க்ஷய வரு ஐப்பசி-மீ ௫ உ


## சிரத்தானந்தர்கூறிய விதவாவிவாஹத்திற்குகண்டனம்

சென்ற புரட்டாசி-மீ 2 உ (17—9—26)இல் வெளிவந்த சுதேசமித்திரன் பேபரில் சிரத்தாநந்தரால் "விதவைகளின் புனர் விவாஹம், யுகத்திற்கேற்றபடியே தர்மம்" என்று தலையங்கமிட்ட ஓர் வியாஸத்தைக் கண்ணுற்றோம். அதில், ஒரு ஹிந்து விதவை தனது முதலாவது புருஷன் இறந்தபின் மற்றொரு புருஷனை மணக்க வேதங்கள் அனுமதிக்கின்றன. வேதத்திலிருந்து இதற்காதாரமாக எடுத்துக்காட்டிய பாகத்தில் நியோகத்திற்கும் புனர் விவாஹத்திற்கும் வித்தியாசம்கற்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றுகூறப் பட்டிருக்கிறது. இதுமுற்றிலும் தவறேயாகும்.

விதவாவிவாஹம் செய்யலாமென்பதற்கு எந்த வேதத்திலிருந்து இவர் ஆதாரத்தை வெளியிட்டிருக்கிறார் என்று நன்கு புலப்படவில்லை. வேதத்திலுள்ள ஏதாவது ஒரு பாகத்தை இவர் கூறும் விதவாவிவாஹத்திற்கு சாதகமென்று எடுத்து வெளியிட்டிருந்தாலும் அதின் கருத்தை இவர் நன்குணராது தமது இஷ்டப்படி அதற்கு பொருள் கூறியிருக்க வேண்டுமேயல்லாது உண்மையில் அது விதவாவிவாஹத்தை ஒருகாலும்வெளியிடாது என்பது திண்ணம். வேததில் விதவாவிவாஹம் கூடாதென்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. யஜுர்வேத ஸம்ஹிதையில் 6 வது காண்டத்தில் 5-வது பிரச்னத்தில் 4-வது அநுவாகத்தில்

यदेकस्मिन् यूपे द्वे रशने परिव्ययनक्ति तस्मादेको द्वे जाये विन्दते यन्नैकां रशनां द्वयोर्यूपयोः परिव्ययत्ति। तस्मान्नैकाद्वौपती विन्दते ॥ इति

ஒரு யூபத்தில் இரண்டு ரசனைகளைக் கட்டுவதுபோல் ஒரு புருஷன் இரண்டு ஸ்திரீகளை விவாஹம் செய்து கொள்கிறான், எங்ஙனம்

ஒரு ரசனையை இரண்டு யூபங்களில் கட்டமுடியாதோ அங்ஙனமே ஒரு ஸ்திரீயானவள். இரண்டு பதிகளை அடையமாட்டாள் இந்த சுருதியினால் ஒரு புருஷன் பல ஸ்திரீகளை விவாஹம்செய்து கொள்ளலாமென்றும் ஒரு ஸ்திரீக்கு பல பதிகள் கிடையாதென்றும் நன்கு வெளியாகின்றது.

விதவாவிவாஹம் கூடாதென்று இந்தத் தைத்திரீய மூலச்ருதியே ஸ்பஷ்டமாய் வெளியிடும்போது இதற்கு மாறுதலாகவேதத்தில் விதவாவிவாஹத்தைக் கூறுகின்றது என்கிற நம் சிரத்தாநந்தர் கூற்றை நாம் எப்படி அங்கீகரிக்க முடியும்? பின்னும், **सोमोददत् गन्धर्वाय** என்கிற மந்திரத்தால் துரியஸ்தே மனுஷ்யஜ: என்று கூறியிருப்பதால் சர்வம் வாக்கியம் ஸாவதாரணம் என்கிற நியாயத்தால் இங்கு மனுஷ்யனை நாலாவதாகக் கூறியிருப்பதால் (5) வதான மனுஷரூபமான பதியை புனர்விவாஹத்தால் அடையக்கூடாதென்றும், அவ்விதம் அடைவது சாஸ்திர விருத்தம் என்றும் மிகவும் பாபகரமான காரியமென்றும் நன்கு வெளியாகின்றது. இவ்விதமில்லாவிடில் நான்காவது என்று கூறியிருப்பது, பயனற்றதாகும். இந்த சுருதிகளின் கருத்திற்கிணங்கவே பல ஸ்மிருதிகளும் விதவாவிவாஹம் கூடாதென்று ஸ்பஷ்டமாய்க் கூறுகின்றன. அவைகளை அடியில் வருமாறு காண்க.

मृते भर्तरि या नारी ब्रह्मचर्यव्रते स्थिता ।
सा मृता लभते स्वर्गं यथा ते ब्रह्मचारिणः ॥
तिस्रः कोट्योऽर्धकोटी च यानि लोमानि मानुषे ।
तावत् कालं वसेत्स्वर्गे भर्तारं चानुगच्छति ॥

தன் கணவன் மரித்தபிறகு எந்த ஸ்திரீயானவள் தவறாமல் பிரம்மசர்யத்திலிருந்து கொண்டிருக்கிறாளோ அவள் $3\frac{1}{2}$ கோடி வருஷ காலம் தன்பதியுடன் ஸ்வர்க்கத்தில் வஸிக்கிறாள் என்று ஒரு ஸ்மிருதி கூறுகின்றது.

भर्तरिप्रेते ब्रह्मचर्यं तदन्वारोहणं वा इति विष्णुस्मरणात् ॥

பர்த்தாவினுடைய காலம்சென்ற பிறகு பிரம்மசர்யவிரதத்திலாவது பதியுடன்கூட அநுமரணமாவது செய்யவேண்டுமென்று விஷ்ணு கூறுகின்றார்.

पत्यौ मृते च या योषित् वैधव्यं पालयेत् कचित् ।

सा पुनः प्राप्य भर्तारं सर्वभोगान् समश्नुते ॥

பதிமரணத்தை யடைந்தபிறகு எந்த ஸ்திரீயானவள் ஏகாந்தத்திலிருந்துகொண்டு விதவாதர்மத்தை நன்கு அனுஷ்டிக்கின்றாளோ அவள் மறுபடியும் லோகாந்திரத்தில் தன் பர்த்தாவையடைந்து சகல போகங்களையும் அனுபவிக்கிறாள் —

विधवा कबरीबन्धो भर्तृबन्धाय जायते ।

शिरसो वपनं तस्मात् कार्यं विधवया तथा ॥

விதவா ஸ்திரீயானவள் கேசத்தை எடுக்காமல் பந்தனஞ்செய்துகொண்டிருந்தால் அது அவள் பர்த்தாவிற்கு பந்தத்தையும் பொருட்டாகிறது. ஆகையால் சிரஸ்ஸை வபனம் செய்துகொள்ள வேண்டுமென்று வியாஸர் வெளியிட்டிருக்கிறார்.

कामं तु क्षपयेद्देहं पुष्पमूलफलैश्शुभैः ।

न च नाम विगृह्णीयात् पत्यौ प्रेते परस्यतु ॥ मनुः ।

விதவாஸ்திரீயானவள் தன் சரீரத்தைக் காய், கிழங்கு, பலம் முதலியவைகளை ஆகாரமாகக்கொண்டு குறைவடையும்படி செய்ய வேண்டும், புஷ்டியான ஆகாரங்களை புஜிக்கக்கூடாது. பதியின் காலம் சென்றபிறகு வேறு புருஷனுடைய பெயரைக்கூட ஸ்மரிக்கக்கூடாது என்று மனு சொல்லுகிறார்.

(தொடரும்.)

உபபத்திராதிபர்.

---

## மாணிக்கவாசகர்.

—(o)—

(480-பக்கத் தொடர்ச்சி)

குதிரைத் தலைவர் குதிரை வாணிகத்தின் வழக்கப்படி கயிறு மாறிக்கொடுக்க அரசன் உடன்பட்டு ஏற்றுக்கொண்டான்; அவர்

களுக்குப் பல வரிசைகளை வழங்கினான்; குதிரைகளைத் தன்னுடைய பந்திகளுக்கு இட்டுச் செல்லுமாறு கட்டளையிட்டான். அனைவரும் தத்தம்மாளிகைக்குச் சென்றனர். வீரரும் ஏகினர். வாதவூரர் அடிகளும் அரசன் தந்தவரிசைகளைப்பெற்றுத் தமது மாளிகைக்குச் சென்றார்; வினவிய சுற்றத்தார்களை அவரவர்களுக்கு ஏற்ற உபசாரமொழிகளைக்கூறி அனுப்பினார்; ஆலவாய்க் கடவுள் தம்மை ஆண்டருளிய திறத்தையும் குதிரைகளால், அரசனை மகிழ்வித்த சதுரையும் எண்ணி எண்ணி உள்ளம் பூரித்தார்; 'உலகப்பற்றில் இருந்து விடுவித்துப்பேரின்பத்தை அடையுமாறு திருவருள் புரிதல் வேண்டும்' என வேண்டி ஒரு புறத்திலே அமர்ந்திருந்தார். சூரியனும் அஸ்தயமானான்.

அன்றை இரவிலே சிவபிரானது திருவிளையாட்டால் குதிரைகளாக வந்த நரிகள் தங்கள் தங்களுடைய முன்னை உருவங்களை அடைந்தன. கட்டுண்டிருப்பதை பெறுத்தன; பந்தியில் உள்ள குதிரைகளையும், காவலர்களையும் அழித்தன; வெளியிலேசென்று திரியலாயின, அதனைக்கண்டு அச்சங்கொண்ட நகரமாந்தர்கள் இரவு முழுவதும் விழித்துக்கொண்டிருந்தார்கள் பொழுது விடிந்ததும், காவலர்கள் பெரிதும் அச்சங்கொண்டு அரசனிடம் நிகழ்ந்த செய்திகளைத் தெரிவித்துக்கொண்டார்கள். கேட்ட அரசன் கண்களிலே தீப்பொறி சிந்தக் கோப பரவசன் ஆனான், கண்ட மந்திரிமார் பயந்து ஒதுங்கினர். குதிரைகளைக் கண்டமையால் அமுது உண்டவன்போலும் மகிழ்வடைந்த மன்னவன், அவை 'நரிகளாகமாறின' என்ற செய்தியைக் கேட்டதும் விஷம் உண்டவன் போலத் துயரக்கடலில் ஆழ்ந்தான்; "மந்திரிகளே, வாதவூரான் என்னும் கள்வன் நமது பொருள் முழுவதையும் கவர்ந்துகொண்டான்; நரிகளைக் குதிரைகளாக்கி நமக்கு வரவிடுத்தான். அந்த வஞ்சகனை நாம் என்ன செய்தல் நியாயமாகும் ?" என்று வினவினான்; வினவலும், மந்திரிமார் ஏதும் கூறவழியறியாது தலைகவிழ்ந்து வாளா இருந்தார்கள்.

இந்நிலையில் மாணிக்கவாசகர் "இராஜகாரியத்தை இனிது நிறைவேற்றிவிட்டோம்; இனிக்கவலையில்லை" என்ற மகிழ்ச்சியுடன் அரசனிடத்திற்கு வந்தார். அரசன் கோபங்கொண்டு "பெருமை வாய்ந்த அந்தணர் குலத்திலே தோன்றிய நீ இங்ஙன

மும் செய்தல் கூடுமோ?" என்று கூறினன்' நிகழ்ந்த ஒன்றனை
யும் அறியாத மணிவாசகர் "நடந்தது யாது?" என்று வினவுத
லும் பரிகள் நரிகளான செய்தி உரைக்கப்பட்டது; பொருள்
முழுவதையும் திரும்பப்பெறும் வரையில் தண்டிக்குமாறும்
தண்டலாளர்கட்கு உத்திரவு கொடுக்கப்பட்டது. தண்டலாளர்
களும் மணிவாசகரைப் பல்வாறு துன்புறுத்தலானார்கள் அத
னைப் பொறுக்கலாற்றாத வாதவூரர் கடவுளை நோக்கிப் புலம்புவா
ராயினர். கேட்ட கடவுள் வைகை நதியைப் பெருக்கெடுத்து
மதுரையை அழிக்குமாறு கட்டளையிட்டார். நதியும் அவ்வாறே
பெருக்கெடுத்து வர, நகரமாந்தர் அனைவரும் உயிர்களையும், பொ
ருள்களையும் காத்தற்பொருட்டு நான்கு திக்குக்களிலும் ஓடலாயி
னர். மணிவாசகரைத் துன்புறுத்திய தண்டலாளர்களும் அங்ங
னமே ஓடினார்கள். மாணிக்கவாசகர் ஆலயத்துட் சென்று
சோமசுந்தரரை வணங்கி மகிழ்ந்து அசைவற்று நின்றனர்.

இச்செய்தி அரசனாகிய பாண்டியனுக்கு எட்டியது. அவன்
உடனே மந்திரிமார்களைப்பார்த்து "நீங்கள் சென்று பெருக்கெ
டுத்து நகரத்தை அழித்துவரும் வைகை நதிக்கரையைக்கட்டி
அதன் பெருக்கைத் தடுத்து வாருங்கள்" என்று கட்டளையிட்
டான். அவர்களும் அவ்வாறே சென்றார்கள். குடிகளுடைய
பெயர்களைக் குறித்து அவர் அவர் அடைக்கவேண்டிய பகுதியை
யும் வரையறை செய்தார்கள்; நகரமுழுவதிலும் பறையறைவித்
துக் கூலியாட்களை ஒன்று கூட்டினார்கள்; குறித்த அளவின்படி
கரைபோடுமாறு ஏவினார்கள்; கூலியாட்களும் தத்தம் பங்கை
அடைக்கலானார்கள்.

இப்படியாக, அந்நகரிலே வந்தியார் என்றும் பெயரினையு
டைய பிட்டுவாணிச்சியார் ஒருவர் இருந்தார். அவர் சோமசுந்த
ரரிடம் பேரன்பு வைத்தவர்; நிறைந்த தவத்தினையுடையவர். அவ
ரது பங்கை அடைப்பதற்கு ஆளில்லை. அதைப்பற்றிப் பெரிதும்
வருந்தினார்; சோமசுந்தரரைக்குறித்து வேண்டினர். வேண்ட
லும், அவரது அன்பிற்கு மகிழ்ந்த கடவுள் ஒரு கூலியாக வந்தி
யார் முன்னே தோன்றினர்; 'கூலிகொடுத்து வேலை கொள்வார்
உண்டோ' என்று கூறினர். கேட்ட வந்தியார் 'பொற்குவியலைப்
பெற்ற வறியவன்' போலமகிழ்ந்து "அப்பனே, எனக்கென அள

ந்து ஒதுக்கப்பட்ட கரையை நீ கட்டிக்கொடுப்பாயோ ?,' என்று வினவினர். வினவலும் "தாயே, நான் பசியால் வருந்துகின்றேன்; உம்மிடமுள்ள உதிர்ந்த பிட்டையெல்லாம் எனக்குக்கொடுத்தால் நான் முதலில் உண்டு இளைப்பாறிப் பின்னர்க் கரையைக் கட்டுவேன்" என்றனர் கடவுள். வந்தியாரும் அங்ஙனமே அளித்தனர். கூலியாளாகவந்த சோமசுந்தரர் "இந்தப்பிட்டு மிகுசுவையுடைத்து; இஃது ஈசற்கே உரியது; தாய்தந்தையற்ற எனக்கு உணவளித்தீர். உமது வேலையை இப்பொழுதே செய்து நிறைவேற்றுவேன்" என்று கூறிச் சென்றனர்.

சென்ற சுந்தரர் வைகைக்கரையை அடைந்து தம்மை வந்தியாரின் கூலியாளாகப்பதியவைத்துக்கொண்டனர்; குறித்த வேலையைச்செய்யாது பாடியும், ஆடியும், நீந்தியும், இடையிடையே வந்தியாரிடம் சென்று பிட்டைவாங்கி உண்டும், நகைத்தும், உறங்கியும் பொழுது போக்குவாராயினர். பிறபகுதிகள் அடைப்பட்டிருக்க வந்தியார் பங்கு மாத்திரம் அடைபடாதிருக்கக்கண்ட ஏவலாளர்கள் அவரது ஆளாகவந்த சுந்தரரை நெருங்கினார்கள்; அவரது உடல் வனப்பைக்கண்டு அஞ்சிப்போய் அரசனிடம் தெரிவித்தார்கள். அடைக்கப்பட்ட கரைகளைப் பார்த்துக் கொண்டுவந்த அரசன் வந்தியார் பங்கு அடைபடாதிருப்பதைக் கண்டான்; "இப்பங்கை அடைப்பவன் எங்கே?" என்று வினவினான். ஏவலாளர் "இவன்தான் வந்தியாரது கூலியாள்" என்று காட்டினர். அரிமர்த்தனன் பொற்பிரம்பால் ஆளாக நின்ற சுந்தரரது முதுகில் அடித்தான். பாண்டியன் சுந்தரரை அடித்த அடிமூவுலகங்களிலும் உள்ள அனைவர் மேலும் பட்டது. சுந்தரரும் ஒரு கூடைமண்ணை உடைப்பிலே கொட்டிவிட்டு மறைந்தருளினார். வந்தியாரும் சிவகணங்களால் சிவலோகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அப்பால், பாண்டியன் கூலியாள் மறைந்ததையும், கரை உயர்ந்ததையும், தனது உடம்பிலே அடிபட்டதையும் கண்டான்; 'என்மேலும் அடிபட்டது; என்மேலும் அடிபட்டது' என்றுகூறிக் கொள்ளுகிற அனைவரது வார்த்தையையும் கேட்டான்; ஐயங் கொண்டான். அக்கால் சுந்தரர் ஆகாயத்திலே அசரீரியாகத் தோன்றி "பாண்டிய நீ செங்கோல் வழுவாத அரசன், உன்னு

டைய பொருள்கள் தருமமார்க்கத்திலே தேடப்பட்டவை; அத னுல் அவைவாதவூரால் எமக்கும், எம்முடைய அன்பர்களுக்கும் அளிக்கப்பட்டன. நரிகள் பரிகளானதும், பரிகள் நரிகளான தும், வைகையில் வெள்ளம் வந்ததும், கூலியாளாகவந்துகரையை அடைத்ததும் வாதவூரர் பொருட்டு நம்பாற்செய்யப்பட்ட திரு விளையாடல்கள், வாதவூராது செய்கையால் நீ இம்மை, மறுமை ஆகிய இரண்டிடங்களிலும் இன்பத்தைப் பெற்றவனுப். இனி, வாதவூரரை அவரது இஷ்டப்படியே செல்லவிடு" என்று கூறியரு ளினுர். அரசன் சுந்தரக் கடவுளது திருவருளையும், மாணிக்க வாசகரது பேரன்பையும் வியந்தான்; பலவாருகக் கடவுளைத் துதித்தான்; மாணிக்கவாசகரை எங்கும்தேடிக் காணுது கோயி லிற்கண்டான்; வணங்கினுன்; தான் இழைத்தபிழைகளைப் பொறு த்தருளுமாறு வேண்டினுன். மாணிக்கவாசகரால் நன்றியறிதல் நிரம்பிய மொழிகளும், ஆசிமொழிகளும் கூறப்பட்டுக் கடவுளை வணங்கி அரண்மனைக்கு வந்தான்.

மாணிக்கவாசகர் திருவருட்குறிப்பால் சிதம்பரத்துக்குச் சென்றனர்; அங்கே பஞ்சகிருத்தியத் திருநடனஞ் செய்கின்ற சபாநாயகரைக் கண்டனர்; நிலத்தில் வீழ்ந்து வணங்கினர்; மனம் உருகப்பாடினர்; திருவாசகம் திருக்கோவையர் முதலியவற்றை அருளிச்செய்தனர்; ஒரு சோலையை அடைந்து தவமியற்றிவந்த னர்; கடவுளின் உத்தரவுப்படி புத்தரைவாதில் வென்றனர்; சோழ அரசனது மகளின் ஊமைத் தன்மையை நீக்கிப்பேசுவித்தனர்; அந்தத் தவத்திலேயே சிவபெருமானுடைய திருவடிநிழலை அடை ந்தனர்.

தண்டமிழ்த்தொண்டர்.

---

## சாரதாவிலாஸ ஸபா சேங்காலிபுரம்.

15—10—26 தேதியன்று மாலை சுமார் 2—30 மணிக்கு பிரமஸ்ரீ K. வைத்யநாத சாஸ்திரிகள் அவர்களின் அக்கிராஸனத் தின்கீழ் மகா-ா-ஸ்ரீ V. பஞ்சாபகேசய்யர் அவர்களின் ஆதரவில் நடந்துவரும் ஜகத்குரு ஸம்ஸ்கிருத வித்தியாசாலையில் மேற்படி வித்யாசாலை மாணவர்களால் ஓர் ஸபை கூடப்பெற்றது. அச்சம யம் பலகனவான்களும் பாடசாலைமாணவர்களும் வந்திருந்தார்கள்.

அப்போது வித்யாசாலே மாணவர்களுக்குள் தமிழ்க்கல்வியில் சிறந்தவரான S. K. நாராயணஸாமி அய்யர் ஸம்ஸ்கிருத பாஷையானது எவ்வித பாஷையிலும் மேலானதென்றும் அப்பாஷையையே அவசியம் ப்ராமணர்கள் கற்கவேண்டுமென்றும் அதனால் உண்டாகும் நன்மைகளையும் மற்ற பாஷைகளினால் உண்டாகும் தீமைகளைப் பற்றியும், (2) N. மஹாதேவன் ஸம்ஸ்கிருத பாஷையின் அவசியத்தைப் பற்றியும் குருபக்தியின் அவசியத்தைப் பற்றியும் (3) K. வெங்கிட்டராமசாஸ்திரிகள் கிருஷ்ணவதார தத்வத்தைப்பற்றியும் (4) N. வைத்யநாதன் சிவபக்தியின் அவசியத்தைப் பற்றியும் (5) S. ஸுந்தரேசன் பாரதத்தில் உத்தரா விவாஹத்தைப் பற்றியும் (6) S. யக்ஞநாராயணதீக்ஷிதர் துரியோதனனிடம் ஸ்ரீ கிருஷ்ணபகவான் தூதுசென்றதைப் பற்றியும் (7) R. மஹாதேவன் குடும்பதர்மங்களைப் பற்றியும் ஸம்ஸ்கிருதத்தில் தெளிவாய் உபன்யஸித்து ஜனங்களுக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணினார்கள்.

பிறகு அக்கிராஸனர் மேலே கூரியவர்களால்உபன்யஸிக்கப்பெற்ற விஷயங்களைத் தமிழில் எடுத்துரைத்து இப்பாடசாலையின் அபிவிருத்தியைப் பற்றியும் கடவுளைப் பிரார்த்திப்பதாக உபன்யஸித்தபின் சந்தனதாம்பூலம் வழங்கி சபை கலையப்பெற்றது.

S. V. நாகேசுவரன்.

---

## ஸ்ரீ தியாகராஜ மகாரத நிர்மாணமும் கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளின் ஸ்ரீ முகானுக்கிரகமும்.

திருவாரூரில் விளங்கும் ஸ்ரீ தியாகராஜஸ்வாமி மகாரதத்தின் புனருத்தாரனம் செய்யவேண்டியதின் நிமித்தம் ஷை மகாரதக் கமிட்டியாரின் சார்பாக மகிழஞ்சேரி மகா-ா-ஸ்ரீ சாம்பசிவ அய்

ரவர்களும் நானும் கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாத ஆசார்யசுவாமிகள் அவர்களைத் திருப்பாதிரிப்பிலியூர் முகாமில் நேரில்ச்சென்று தெரிசனம் செய்ததில் ஷெ திருப்பணி விஷயமான தர்மத்திற்காக ஸ்ரீ ஜகத்குரு மகாசுவாமிகளவர்கள் ரூ. 1000 நன்கொடையாக அனுக்கிரகித்து ஸ்ரீமுகரூபமான ஓர் அனுக்கிரகத்தையும் செய்தார்கள். பகவத்பக்திபூண்டபக்தகோடிகளனைவரும் மிகவும் சிறந்ததான இந்தத்தர்மம கைங்கர்யத்தில் தங்களாலியன்ற வரையில் ஈடுபட்டு ஷெ மகாரதக் கைங்கர்யத்தைச் சீக்கிறம் பூர்த்தியாகும்படிசெய்து ஸ்ரீ தியாகராஜருடைய பூர்ணமான கிருபைக்கும் ஸ்ரீ பரமேசுவாருடைய திருஉருவத்தின் அவதாரமென்ப் பலராலும் போற்றக்கூடிய மகிமைவாய்ந்த ஸ்ரீ லோககுரு அவர்களுடைய திவ்ய அனுக்கிரகத்திற்கும்பாத்திரர்களாகி பிறவிப் பிணியை அகற்றி உத்தமமான பயனைப்பெற்று சுகித்திருக்கவேண்டி ஷெ ஜகதகுரு அவர்களுடைய ஸ்ரீ முகரூபமான அநுக்ரகம் இதனடியில் வெளியிட்டிபட்டிருக்கிறது.

S. நரஸிம்மய்யர்.

---

## ॥ श्री चन्द्रमौळीश्वर ॥

स्वस्ति श्रीमदखिलभूमण्डलालङ्कारत्रयस्त्रिंशत्कोटिदेवतासेवितश्रीकामाक्षीदेवीसनाथ श्रीमदेकाम्रनाथ श्रीमहादेवीसनाथ श्री हस्तिगिरिनाथ साक्षात्कारपरमाधिष्ठानसत्यव्रतनामाङ्कितकाञ्चीदिव्यक्षेत्रशारदामठसुस्थितानाम्, अतुलितसुधारसमाधुर्यकमलासनकामिनीधम्मिल्लसम्फुल्लमल्लिकामालिकानिष्यन्दमकरन्दझरीसौवस्तिकवाङ्निगुम्फविजृम्भणानन्दतुन्दिलितमनीषिमण्डलानाम्, अनवरताद्वैतविद्याविनोदरसिकानाम्, निरन्तरालङ्कृतीकृतशान्तिदान्तिभूम्नाम्, सकलभुवनचक्रप्रतिष्ठापकश्रीचक्रप्रतिष्ठा विख्यात-

यशोलङ्कृतानाम्, निखिलपाषण्डषण्डकण्टकोद्धाटनेन विशदीकृत-वेदवेदान्तमार्गषण्मतप्रतिष्ठापकाचार्याणाम्, श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यश्रीजगद्गुरुश्रीमच्छङ्करभगवत्पादाचार्याणाम्, अधिष्ठाने सिह्मासनाभिषिक्तश्रीमन्महादेवेन्द्रसरस्वतीसंयमीन्द्राणाम्, अन्ते-वासिवर्य श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वतीश्रीपादैः;

அகில ஸத்குணமணிகளாலங்கிருதர்களும் ஸ்வதர்மோக்தாசார நிரதர்களுமான ஆஸ்திக மஹாஜனங்கள் அனைவருக்கும் ஸர்வாபீஷ்டங்களும் உண்டாவதாக நாராயணஸ்மரணை. ஸர்வோத்தம க்ஷேத்திரங்களாகிய (ஸப்த) எழுவிடங்கக்ஷேத்திரங்களுள் முதன்மையாய் விளங்கும் திருவாரூரென்னும் ஸ்ரீ வீதிவிடங்கக்ஷேத்திரத்தில் தன்னையும் தனது மஹாரதத்தையும் ஒருங்கே சேர்த்து அடியார்களால் போற்றப்பெற்ற வைபவத்துடன் ஸர்வஜனக்ஷேமார்த்தமாக திவ்விய மங்களமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தியாகேசமூர்த்தியின் மஹாரதத்தை முன்போலவே புனருத்தாரணம் செய்வித்து ஸ்ரீ தியாகராஜமூர்த்திக்கு ரதோத்ஸவத்தை நடத்திவைக்கவேண்டுமென்கிற பூர்ண அபிலாஷையுடன் ஆஸ்திகசிகாமணிகளாகிய சீர்காழி ஸ்ரீநிவாஸமுதலியார் மேனாங்குடி மருதவாணம்பிள்ளை, வடபாதிமங்கலம் ரங்கனாதமுதலியார், ஆலிவலம் அருணாசலமுதலியார், மகிழஞ்சேரி சாம்பசிவய்யர் முதலான பக்திமான்கள் அத்யந்த சிரத்தையுடன் பிரவர்த்தித்திருக்கிறார்கள். பூமண்டலத்திற்கே அணிகலமாகவிளங்கும் இந்த உத்தமமான மஹாரதத்தின் தர்ம கைங்கரியத்தில் ஆன்மகோடிகள் அனைவரும் ஈடுபட்டு ஷை கைக்கரியம் சீக்கிரத்தில் பூர்த்தியடையும்படிசெய்து ஸ்ரீ தியாகராஜரின் பரிபூரண கிருபைக்குப் பாத்திரர்களாய் இஹபரக்ஷேமங்களை அடைய வேண்டியது.

முகாம்:— திருப்பாதிரிப்புலியூர்<br>
அக்ஷய ௵ புரட்டாசி ௴ 21௳

நாராயணஸ்மரணை.

# சம்பங்குடி லக்ஷார்ச்சனை.

நன்னிலம் தாலுக்கா சோலை சூடாமணி நதியின் வடபுறத்தில் விளங்கும் ஆஸ்திகர்களான அந்தணர்களால் அலங்கரிக்கப்பட்ட சம்மங்குடி என்கிற சுவர்ணபுரி க்ஷேத்திரத்தில் ஸ்ரீ அகத்திய முனிவரால் மிகவும் பக்தியுடன் பூஜை செய்யப்பட்ட ஸ்ரீ ஆனந்தவல்லி சமேத ஸ்ரீ அகஸ்த்தீச்வரரெனப் பெயர்வாய்ந்த ஸ்ரீ கைலாஸ அதிபதியான ஸ்ரீ பரமேசுவரருக்கு ஷை க்ஷேத்திரத்தில் மிகவும் பக்தியுடன் விளங்கும் பக்தஜனங்களால் சென்ற வருஷத்தில்போல் இவ்வருஷத்திலும் ஸ்ரீ சாரதா நவராத்ர மகோத்ஸவத்தில் புரட்டாசி-மீ 21-உ முதல் 29-உ முடிய விசேஷ அபிஷேக அலங்காரமும் ஸ்ரீ ஆனந்தவல்லி என்னும் பெயர் பூண்ட பரதேவதைக்கு விதிப்படி லக்ஷார்ச்சனையும் நடைபெற்று ஷை மீ 30 தேதியில் ருத்ராபிஷேகமும் நடந்தது. இந்த சமயங்களில் ஒவ்வொரு தினமும் சிவனடியார்களில் பலரும் விஜயம் செய்து ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பாள் சமேத ஸ்ரீ அகஸ்த்தீச்வர சுவாமியை பக்தி சிரத்தையுடன் தரிசனவந்தனுதிகள்செய்து ஷை ஆதி தம்பதிகளுடைய அநுக்கிரகத்திற்குப் பாத்திரர்களானார்கள்.

N. S. சுந்தரேசுவரய்யர்,

செம்மங்குடி.

---

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.

அதனால் வேதவித்துக்களாயுள்ளவர் போகயோக ஞானப் பிரதமான மூவிதசக்தி பிம்பங்களையும் இதுகாறும் கூறிவந்த முறைப்படி அந்தந்தப்பேதமாகவே பூஜிப்பார்களேயல்லாமல்எல்லாம் ஒரு சக்திதானென்று எல்லாப் பிம்பங்களையும் நிர்க்குண பரமான ஆராதனையாலாவது, சகுணபரமான ஆராதனையாலாவது செய்யார்.

இதுவுமன்றி பிம்பபேதம்போலவே யந்திர பேதங்களும் உண்டு. ஆகலான் இவைகளை அந்தந்தப் பிம்பங்களுக்கும் யந்திரங்களுக்கும் உரிமையாய் விதித்திருக்கும மந்திரபேதங்களையும் தந்திரபேதங்களையும நன்றாபுணர்ந்து பூஜைகளையாவது உற்சவங்களையாவது செய்தல் வேண்டும் அங்ஙனம் செப்வாராயின் அவை அவர்களுக்கு மங்களத்தையே செய்யும்.

மந்திர பேதங்களையும் தந்திரபேதங்களையும் அறிந்து செய்ய வேண்டுமென்பது என்னையெனின், பராசக்தியானவள் காஞ்சி க்ஷேத்திரத்தில் மூன்றுவிதமான சக்தி பேதமாகவும், இரண்டு விதமான சிவபேதமாகவும், ஒரு விதமான விஷ்ணுபேதமாகவும் காணப்படும் ஆறுவிதமான பிம்பபேதங்களில் ஆறுவிதமானபேதங்களாகவே கலந்திருக்கின்றாளாதலால் அர்ச்சனை செய்யுங்கால் அந்தப் பேதங்களையறிந்து மந்திரதந்திரங்களைச் செய்யவேண்டுமென்று விதித்ததென்க.

ஆறுவிதமாவன:—திரிபுராம்பிகையில் ஜோதி ஸ்வரூபமாயிருக்கின்ற பூர்ணசக்தி ஸ்வரூபமாகவும், தபோரூபிணியாகிய காமாக்ஷியினிடத்தில் கலாரூபமாகவும், கலியாண கௌரியினிடத்தில் கலியாண கோலத்துக்குரிய அங்கஸ்வரூபிணியாகவும், நிர்க்குண ரூதஜோதிலிங்கத்தில் நிர்க்குணையாய் நிர்க்குண சிவஸ்வரூபிணியாகவும், தழுவக்குழைந்த பெருமானுப்வந்த சகுணலிங்கத்தில் சகுணையாய்ச் சகுண ஸ்வரூபிணியாகவும் பிம்பசக்திவடிவத்தினுடைய அர்த்தாம்ச ஸ்வரூபமாயிருக்கின்ற வரதராஜ மூர்த்தியினிடத்தில் புருஷரூபமாகவும்பராசக்தியானவள்விளங்குகின்றாள்

இந்த ஆறுவிதமான மூர்த்தி பேதங்களிடத்தில் ஆறுவிதமான அம்சங்களாக விருக்கும் பூரணம்சமான பராசக்தி வீற்றிருக்தும் காமராஜபீடமாகிய காமகோடி பீடத்தை எவன் தரிசிக்

காமற்போகின்றானோ அவன் வியர்த்தனாப் நரகாச்ரயனாகின்றான். எவன் தரிசிக்கின்றானோ அவன் தன்யனாய் ஜீவன் முக்தனாகின்றான். இதிற்சந்தேகமில்லை.

மந்திரதந்திர பேதங்களை யறிந்து மூர்த்திபேதங்களை ஆராதனை செய்ய அசக்தனாகிற பக்ஷத்தில் கௌளாகமத்தில் சொல்லியபடி திரிகோணாகாரமாயிருக்கிற ஸ்ரீ சக்கரத்தில் பூர்வகோணத்தினுடைய அக்ரத்தில்குருபரமகுரு பரமேஷ்டிகுரு,பராத்பரகுரு என்கிற மஹான்களாகிய ஆசார்யர்களைப்பாவித்துப் பூஜைசெய்தும்மகாகாமேச்வரிகூடத்தில் ஸ்ரீவித்தையைநினைத்து அஷ்டோத்தர ஸஹஸ்ரநாமம் முதலிய அர்ச்சனை பேதங்களால் அர்ச்சனைகளைச்செய்தும் வாக்பவகூடத்தில் ஸ்ரீவித்தியா மந்திரத்தை ஜபித்தலையும் செய்வானாயின் அவன் அந்தத்கர்ம நெறிகளால் அன்னபானாதிகளுக்கு யாதொரு குறைவின்றிச் சந்தோஷ சித்தனாய் வாழ்வான். இந்த விதமாய் ஸ்ரீ சக்கர பூஜையும்செய்யக்கூடாதவன் அந்தரங்க பக்தியுடன் ஸ்ரீ காமாக்ஷிதேவியினுடைய சரணகமலங்களைத் தியானம் செய்யக்கடவன்.

இங்ஙனம் சொல்லிவந்த முறைமையில் ஒருவன் ஜன்மமெடுத்து மரணமடைவதற்குள் யாதானும் ஒருமுறையில் ஸ்ரீ காஞ்சியில் காமகோடி பீடத்தில் தேவியை வழிபடல் வேண்டும். வழிபடுவானாயின் அவனுக்குப்புனர் ஜன்மமும் மரணாவஸ்தையும உண்டாகா. அவ்வழிபாடில்லாதவன் ஒரு பிரமகல்பம் பரியந்தம் கிரிமியாகவே பிறப்பான். ஆகலான் தனத்திற்சிறந்த அரசன் முதலாயினர் ஸ்ரீவித்தையினுடைய அர்ச்சனையை அவசியம்செய்தல் வேண்டும், அங்ஙனம் செய்வோர்க்கு வேண்டியவை கொடுக்க ஸ்ரீ காமாக்ஷி தேவியானவள் காஞ்சிக்ஷேத்திரத்தில் காமகோடி பீடத்தில் பிரசன்னையாயிருக்கிறாள்.

பூர்வத்தில் மஹாலக்ஷ்மி, ஹயக்ரீவ முனிவர், மநுச்சக்கரவர்த்தி, தசாதசக்கரவர்த்தி, துண்டீரமகாராஜன் காந்தார மஹாராஜன், சோழமஹாராஜன், உருத்திரர் அனந்தன் முதலாயினோர் தேவியினுடைய பூஜை அர்ச்சனை ஜபங்களைக் கர்த்தவ்யமாகக் கொண்டு செய்திருக்கின்றனர்,

## ஆராதனை செய்தவர் வரலாறு இலக்ஷ்மி.

பூர்வம் அமிர்தம் கடைந்தகாலத்தில் வெண்ணிறமாயிருந்த விஷ்ணுமூர்த்தி விஷமுண்டானபின்னர் நீலநிறமுடையவராயினர். அப்பொழுது அவர் மார்பிலிருந்த இலக்ஷ்மிதேவி அவருடைய கருமை நிறத்தைப் பார்த்தும் பொன்னிறமாயிருக்கின்ற என க்குக்கருமை நிறமடைந்திருக்கின்ற நீர் இனிப்பிரியமாக மாட்டீர் என்று பரிகாசமாகச் சொல்ல அவர் கோபம் கொண்டவராய் "ஹே, இலக்ஷ்மி, நீ மிக அழகியோ? சிகப்பியோ? இனி நான் வெறுக்கத்தக்க கருப்பியாயும் கிழவியாயும் போகக்கடவாய்" என்று சபிக்க லக்ஷ்மி அந்தச்சாபமேற்றவளாய்க் காஞ்சியில் காமகோடி பீடத்தையடைந்து மஹாலக்ஷ்மியாகிய மஹாதேவி க்கு எதிராகவந்து பணிந்து நின்றனள். அந்த லக்ஷ்மியைத் தேவி பார்த்து "உனக்கு இந்த நிறமும் கிழத்தனமும் எங்கிருந்து வந்தது? நீ விஷ்ணுவினுடைய ஹ்ருதயத்திலிருந்து பூஜிக்கப் பட்டதுபோல் இனி எனக்கு அங்கமாயிருக்கிற இந்தக்காயத்திரி மண்டபத்தில் வலது பக்கத்தில் சாந்நித்தியமாயிருந்து பக்தா பீஷ்டப் பிரதானியாகவிருப்பாய் அன்றியும் எனக்குப் பிரியை யாயிருக்கிற உன்னை யாரொருவர் பாதம் முதல் உச்சி வரையில் தொட்டும் தியானித்தும், தரிசித்தும் செல்கின்றார்களோ அவர் களுக்கு நீர் அஷ்டைச்வரியமும் கொடுத்துவருவாய்" என்று ஆக்ஞை செய்ய அந்த ஆக்ஞையைப் பெற்று எப்பொழுதும் அவ்விடத்திலேயே இருப்பவளாக அந்த லக்ஷ்மிதேவியாயினள்.

## ஹயக்கிரீவர்.

பூர்வத்தில் ஹயக்கிரீவ முனிவர் விஷ்ணுரூபத்தையடைய வேண்டிக் காமகோட்டத்தையடைந்து காமாக்ஷிதேவியைப் பூஜி த்து ஹ்ருதயத்தில் தியானித்துத் தவம் புரிந்து வந்தனர். அந்தச் சமயத்தில் பதுமநாபனென்னும் ராக்ஷசன் அங்குவர அவன் அவரைக் குதிரை என்று நினைத்துத்தனக்கு வாகனமாகக் கொள் ளவெண்ணிப் பாதாலத்துக்குக்கொண்டு போயினர். அவனை அம்பிகை கொன்று அவர் வேண்டிய வண்ணம் விஷ்ணு முகத் தைக்கொடுத்தனள். பின்னர் ஹயக்கிரீவர் பாதாளத்திலிருந்த ராக்ஷஸர்களையெல்லாம் கொன்று சுக்கிராசாரியாரால் நிர்மிக்கப்

பட்டிருந்த குறைவுபடாத அமிர்தகலசத்தைக்கிரகித்துக்கொண்டு உடனே காமகோட்டத்துக்கு வந்து திரிபுராம்பிகைக்கு அபிஷே செய்து ஆராதித்து அம்பிகைக்குத் தக்ஷிணபாகத்தில் இருந்து விட்டனர்.

## மநுசக்கரவர்த்தி.

பூர்வத்தில் எட்டாவதாகிய மநு, சூரியபகவானுல் கொடுக்கப்பட்ட பூவுலகைப்பெற்று அரசுபுரிவதற்கு அறியவேண்டுவனவாகிய புண்ணிய பாவங்களை முன்னர் நன்குணரவேண்டுமென்றெண்ணி இராஜ்யத்தைச் சுமந்திரனென்கிற மந்திரியினிடத்தில் ஒப்புவித்து வசிஷ்ட முனிவரிடத்தில் விடைபெற்று, காமகோட்டத்தையடைந்து அங்கிருந்த தூர்வாச முனிவரிடத்தில் தேவி மந்திரோபதேசம் பெற்று அந்த மந்திர முறைப்படியே தேவியினுடைய ஆராதனமும் தியானமும் செய்தலாகிய அரிய தவத்தை இயற்றி. வந்தனன் ஒரு நாள் காமாக்ஷிதேவி கலைமகளுருவங்கொண்டு ஓர் கும்பத்தில் உலகாணித் தீர்த்தமாகிய பஞ்சதீர்த்தத்தை நிறைத்து அந்த மநுவுக்கெதிரில் பிரசன்னையாய் அந்தத் தீர்த்தத்தை அவன் சிரசின்மேல் அபிஷேகம்செய்து சகல கலைகளும் உணரும் வண்ணம் அனுக்கிரகம் செய்து அந்தர்த்தானமாயினுர். பின்னர் மநுச்சக்கரவர்த்தி கலைமகளுக்குச் சமானமாகச் சர்வசாஸ்திரபாரங்கதனுய்த் தன்னகரம் போய்ச் சேர்ந்து நீதி வழியே செங்கோல் செலுத்தி வாழ்ந்திருந்தனன்.

## தசரதசக்கரவர்த்தி.

தசரத சக்கரவர்த்தியானவர் புத்திரப்பேறு வேண்டி வசிஷ்டருடைய ஆக்ஞையின் பிரகாரம் தீர்த்த யாத்திரையை விதி முறையாக நடத்திக் காமகோடி பீடத்துக்கு வந்து திரிபுராம்பிகையைத் தரிசித்துப் போற்றி வணங்கிப் பூஜித்து வந்தனன். ஓர் நாள் ஆகாசவாணியானவள் “ஓ, அரசனே உனக்கு இன்னும் ஒரு வருஷத்தில் நன்மக்கட்பேறுண்டாகும்.” என்றுகூற அதனை அரசன் கேட்டு மகிழ்ந்து தன் நகரம் போய்ச் சேர்ந்து மக்கட்பேறு பெற்றனன்.